




# வரவிருக்கும் நெருக்கடி


பாடம் 11ஜூன் 15, 2024



"உம்முடைய சத்தியத்தினாலே
அவர்களைப் பரிசுத்தமாக்கும்;
உம்முடைய வசனமே சத்தியம்."
(யோவான் 17:17)


நூற்றாண்டுகளாக, கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையேயான போராட்டம் தொழுகையை மையப்படுத்தியே இருக்கிறது. தேவனை தொழுவதா, அல்லது தேவனுடைய குணத்தை சிதைக்கும் வேறு எதையாவது வணங்குவதா.

தேவனைப் பற்றி தவறான கருத்துக்களை காண்பிப்பதினால், சிருஷ்டிகரை யாராவது தொழுகை செய்ய விரும்பினால் அவர்களை அழிக்க சாத்தான் மக்களை, சபைகளை மற்றும் தேசங்களை பயன்படுத்துகிறான்.

அடிப்படை உண்மைகள், தேவனுடைய நியாயப்பிரமாணம், சிதைக்கப்பட்டுள்ளன (ஓய்வுநாளை போல) அல்லது மறக்கப்பட்டுள்ளன. கடைசி யுத்தம் உண்மையான நாளில் தொழுகை செய்வதை குறித்தே சுழலப் போகிறது. கடைசி யுத்தத்தில் சாத்தான் பயன்படுத்தப்போகிற வல்லமைகளை நாம் சந்திப்போமா.







நெருக்கடி:

- தொழுகை.
- சகிப்பின்மை.

சத்துரு:


- வலுசர்ப்பத்தின் சிங்காசனம்.
- ஆற்றப்பட்ட காயம்.
- ஆட்டுக்குட்டியும் மிருகமும்.

# நெருக்கடி

# தொழுகை

"கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்." (வெளிப்படுத்தல் 4:11)





பரலோகவாசிகள் தேவனுடைய சிருஷ்டிக்கும் வல்லமைக்காக அவரை தொழுகை செய்கிறார்கள்(வெளி. 4:11; யோபு 38:6-7).

நம் தொழுகையைப் பெற்றுக்கொள்ள, தேவன் தன்னை சிருஷ்டிகராக மீட்பராக தன்னை வெளிப்படுத்துகிறார் (ஏசா. 45:6-7, 18-20; 65:18).

சிருஷ்டிகராகிய தேவனை தொழுதும்கொள்ளும்படியான அழைப்பு இந்த உலகின் கடைசி தலைமுறைக்கு செய்தியாக அறிவிக்கப்படுகிறது (வெளி. 14:7).





அவனுடைய பங்காக, சாத்தான் இந்த உலகத்தின் தொழுகையை பெற்றுக்கொள்ளும்படி, "மிருகங்களுக்கு" தன்னுடைய வல்லமையை கொடுத்து, தான் தொழுகையை பெற்றுக்கொள்வதற்கு தனக்கொரு "சொரூபத்தை" உருவாக்கும்படி கட்டளையிடுறான் (வெளி. 13:2, 4, 14-15).


அப்படிப்பட்ட காலங்களில் ஓய்வுநாள் ஒரு நெருக்கடியின் புள்ளியாக இருப்பது ஆச்சர்யபடுவதற்கில்லை. "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்கள்" (வெளி. 14:12) சிருஷ்டிப்பின் சின்னமாகிய ஓய்வுநாளிலே அவரை தொழுகை செய்வார்கள்.

# சகிப்பின்மை

"அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்." (யோவான் 16:2).



நம்முடைய போராட்டம் சரீரத்துக்குரியதல்ல, ஆவிக்குரியது(எபே. 6:12). நாம் சரீரப்பிரகாரமான ஆயுதங்களையல்ல, ஆவிக்குரிய ஆயுதங்களையே பயன்படுத்தவேண்டும் (2கொரி. 10: 3-5). என்றாலும், சத்துரு நமக்கெதிராக சரீரப்பிரகாரமான ஆயுதங்களை பயன்படுத்த தயங்குவதில்லை. விசுவாசமுள்ள சபைக்கு எதிரான சாத்தானின் கடுமையான தாக்குதலால், விசுவாசிகளின் வாயிலிருந்து வரக்கூடிய ஒரு "ஐயோ" கூட வீணாவதில்லை (வெளி. 12:12). அவனுக்கு, எந்தவொரு ஆயுதமும் செல்லுபடியாகும்.




- அவன் நம் விருப்பங்களின் மூலம் நம்மை தூண்டுகிறான் (யாக் 1:14)
- நுணுக்கமான காரியங்களின் மூலம் நம்மை நம்பபண்ணுகிறான் (2கொரி. 4:3-4)
- நெருக்கமானவர்களை பயன்படுத்துகிறான் (மத். 10:34-36)
- அவன் அடிக்கிறான், எச்சரிக்கிறான் (அப் 5:40)
- தீவிர வன்முறையை பயன்படுத்துகிறான் (யோவான் 16:2)

இப்படித்தான் வரலாற்றிலே அவன் செயலாற்றியிருக்கிறான், அவனுடைய கடைசி தாக்குதலும் இப்படியாகத்தான் இருக்கும்: வஞ்சகங்களும் மோசங்களும் கொண்டு வருவான் (வெளி. 13:13-14); பொருளாதார தடைகளை அமல்படுத்துவான் (வெளி. 13:16-17 ); அவனை தொழுகை செய்யாத எவருக்கும் மரண தண்டனை வழங்குவான் (வெளி. 13:15).

# சத்துரு

# வலுசர்ப்பத்தின் சிங்காசனம்

"வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது." (வெளி 13:2)



வலுசர்ப்பம் சாத்தானாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது (வெளி. 12:9), மிருகத்தை வைத்து, தன்னுடைய வல்லமையை செயல்படுத்துகிறது, தானியேல் 7ஆம் அதிகாரத்தில் 4ஆம் மிருகமாக அடையானப்படுத்தப்படுகிறது (சிங்கம், கரடி மற்றும் சிறுத்தை, பின்பு வரக்கூடிய மிருகம், பார்க்க. வெளி. 13:2). வெளிபடுத்தல் 12ன் விரிவான விளக்கமே வெளிபடுத்தல் 13. அது இயேசுவை கொலைசெய்ய முயற்சித்தது முதல் அவர் பரமேறிய பின் நடந்தவைகளிலிருந்து தொடங்குகிறது (வெளி. 12:3-5). முதல் ஒரு சில வசனங்கள் 1260 வருடங்களாக நடந்த தாக்குதலைக் குறித்து கூறுகிறது, மற்ற வசனங்கள் "அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, ... அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று" (வெளி. 12:17) இந்த சம்பவங்களை குறித்து பேசுகிறது.



பார்பேரியர்களின் படையெடுப்புக்கு பின்பு, ரோம சாம்ராஜ்யம் பிரிந்தது. கொஞ்சம் கொஞ்சமாக, ரோம் சபையின் கைகளில் விடப்பட்டது, இப்படி சபை அரசியல் வல்லமையைப் பெற்றுக்கொண்டு விசுவாசமுள்ள சபையை துன்புறுத்தக்கூடிய தூஷண வல்லமையாக மாறியது (வெளி. 13:4-8).



# ஆற்றப்பட்ட காயம்



"சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்." (வெளிப்படுத்தல் 13:10)

பல நூற்றாண்டுகளாய் அந்த வல்லமையை பயன்படுத்திய பின் "சிறைப்பட்டுப்போவான்" மற்றும் "பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும்" (வெளி. 13:10), ரோம சபை சிறைப்பட்டுபோனது (அதின் தலைகளிலொன்று, பயஸ் VI) மற்றும் "சாவுக்கேதுவான காயத்தால்" தவித்தது (வெளி. 13:3).

1870 வரை போப் தன்னுடைய பாப்பு மார்க்க நாடுகளின் உரிமையை பராமரித்தாலும், இத்தாலி இராஜ்யம் உருவாக்கப்பட்ட போது அவர் தன்னுடைய எல்லைகளை இழந்தார். அந்நேரத்தில், சபை தன்னுடைய முந்தைய அதிகாரத்தை திரும்ப பெற்றுக்கொள்ளாதது போல தெரிந்தது.




1929ல், வாடிகன் நகரம் தனி பிரதேசமாக அங்கிகரிக்கப்பட்டது. காயம் ஆற்றப்பட ஆரம்பித்தது. இப்போதிலிருந்து இனி என்ன நடக்கப்போகிறது?





இறுதி சம்பவங்கள் வெளிவரும்போது, உலகளாவிய நெருக்கடிக்கு தீர்வுகளை முன்மொழிய ஒரு உலக தலைவர் தேடப்படுவார். போப்பாண்டவர் வழங்கும் தீர்வுகளின் தொகுப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி ஞாயிறு ஓய்வு என்பது குடும்பங்கள், மக்கள் மற்றும் நாடுகளின் ஒன்றியத்திற்கான வலுவான புள்ளியாக இருக்கும்.



# ஆட்டுக்குட்டியும் வலுசர்ப்பமும்

"பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது." (வெளிப்படுத்தல் 13:11)




இயேசு நிறுவிய திருச்சபையின் சிதைவிலிருந்து முதல் மிருகம் எழுந்தது. அவள் காயப்பட்ட போது, அவளுடைய இடத்தை எடுத்துக்கொள்ளவும், அவளுடைய காயத்தை ஆற்றவும் சாத்தான் ஒரு "கள்ள தீர்க்கதரிசியை" தேடினான் (வெளி. 13:11; 16:13 ). மீண்டும், கிறிஸ்தவத்தின் தூய கொள்கைகளின் அடிப்படையில் தோன்றிய ஒரு தேசத்திலிருந்து அவன் தனது கூட்டாளியை கண்டார்: வட அமெரிக்கா.

அவன் இயேசுவை (ஆட்டுக்குட்டி) பிரதிபலிக்க ஆரம்பித்தான். அது ஒரு குடியரசு நாடு(இராஜாக்களல்லாத, கிரீடங்களல்லாத), இரண்டு வல்லமைகளின் (கொம்புகள்) பிரிவின் அடிப்படையில் உள்ள நாடு: அரசியல் மற்றும் மத வல்லமை.

முதல் உலக வல்லமையாக, அது வலுசர்ப்பத்தை போல பேசியது. விரைவில் அது மத விஷயங்களில் சட்டங்களை உருவாக்கத் தொடங்கும், அது போப்பாண்டவருக்கு ஆதரவளித்து, "மிருகத்திற்கு சொரூபத்தையும்" அளிக்கும் (வெளி. 13:12-14).

